**Akhbar** : Malaysia Nanban

**Tarikh** : 13 Ogos 2021

**Muka surat** : 1 & 13

**Tajuk** : Kuil-kuil boleh beroperasi mulai hari ini – Kebenaran bagi orang yang sudah lengkap 2 dos vaksin

**Terjemahan** :

Kementerian Perpaduan Negara telah memberi kebenaran kepada para penganut yang telah melepasi 14 hari dari tarikh suntikan dos kedua, untuk menghadiri kuil-kuil mulai hari ini. Kementerian ini telah menyelaras Prosedur Operasi Standard (SOP) bagi Pembukaan Rumah Ibadat Selain Islam dalam tempoh Pelan Pemulihan Negara (PPN) bagi kemudahan penerima vaksin lengkap. Para penganut dikehendaki untuk menunjukkan sijil vaksinasi masing-masing di aplikasi MySejahtera kepada pihak jawatankuasa kuil sebelum masuk ke kuil.

**Negeri-negeri di fasa 1 :**

Kuil-kuil di fasa 1 dibenarkan beroperasi dari pukul 6pagi hingga 2petang dan 4petang hingga 10 malam. Penganut yang telah melepasi 14 hari dari tarikh suntikan dos kedua sahaja dibenarkan ke kuil. Kehadiran penganut yang lengkap vaksinasi adalah terhad kepada 50 orang pada satu-satu masa. Kuil tidak dibenarkan beroperasi jika pendeta dan pekerja di kuil belum melengkapi dua dos. Hanya 12 orang ahli jawatankuasa sahaja dibenarkan berada dalam kuil.

**Negeri-negeri di fasa 2 :**

Sama seperti yang dimaklum untuk negeri-negeri di fasa 1.

**Negeri-negeri di fasa 3 :**

Masa beroperasi, dan kehadiran penganut dan pendeta yang lengkap dua dos adalah sama seperti di negeri-negeri fasa 1 dan fasa 2. Bilangan kehadiran penganut tertakluk kepada saiz ruang sembahyang kuil.

Majlis perkahwinan dan pesta tahunan kuil tidak dibenarkan. Para penganut harus memakai pelitup muka dan mendaftar kehadiran dalam aplikasi MySejahtera. Jika tiada aplikasi berkenaan, daftar nama dalam buku rekod kehadiran. Orang ramai dinasihati agar sentiasa menjaga kebersihan diri dengan menggunakan pembasmi kuman, dan memastikan penjarakan fizikal.



## இன்று முதல் ஆலயங்கள்

# திறப்பு

### 2 தடுப்பூசிகளை செலுத்தியவர்களுக்கு அனுமதி

கோலாலம்பூர், ஆக. 13-
இன்று முதல் நாட்டில் ஆலயங்கள் திறக்கப்படுகின்ற வேளையில் இரண்டு தடுப்பூசிகளையும் செலுத்தி முடித்தவர்கள் 14 நாட்களுக்குப் பிறகு ஆலயங்களுக்குச் செல்ல அனுமதி வழங்கப்படுவதாக தேசிய ஒற்றுமைத்துறை அமைச்சு அனுமதி வழங்கியிருக்கிறது.

எனினும் நாடு தழுவிய நிலையில் அந்தந்த மாநிலங்கள் எந்தெந்த மீட்பு பிரிவில் இருக்கிறதோ அந்தந்த நிலைக்கு ஏற்ப

பக்கம் 13



முதல் பக்கத் தொடர்ச்சி

## இன்று முதல் ஆலயங்கள்...

இந்த ஆலயங்களுக்குச் செல்வதற்கான எண்ணிக்கையும் விதிகளும் மாறுபடும் என்று அமைச்சு தெரிவித்துள்ளது.

இரண்டு தடுப்பூசிகளையும் செலுத்தியவர்கள் 14 நாட்கள் முடிவடைந்த பின்னர் தங்கள் மைசெஜாத்ரா செயலியில் உள்ள தடுப்பூசி சான்றிதழை ஆலய நிர்வாகத்திடம் காட்டி வழிபாட்டில் கலந்து கொள்ளலாம்.

### முதல் கட்ட மாநிலங்கள்:

முதல் கட்ட மீட்பில் உள்ள மாநிலங்கள் ஆலயங்களை திறக்க அனுமதி வழங்கப்படுகிறது. இரண்டு தடுப்பூசிகளையும் நிறைவு செய்தவர்கள் 14 நாட்களுக்கு பிறகு செல்லலாம். ஒரு நேரத்தில் 50 பக்தர்கள் மட்டும் ஆலயத்தில் இருக்க அனுமதிக்கப்படுவர்.

ஆலயங்கள் காலை 6 மணி முதல் பிற்பகல் 2 மணி வரையும் மாலை 4 மணி முதல் இரவு 10 மணிவரையும் திறந்திருக்கும். ஆலய குருக்கள் மற்றும் ஆலயப் பணியாளர்களும் இரண்டு தடுப்பூசிகளையும் செலுத்தியிருக்க வேண்டும்.

ஆலய குருக்கள் உதவியாளர்கள் இன்னும் இரண்டு தடுப்பூசிகளை செலுத்திக் கொள்ளவில்லை என்றால் ஆலயத்தை திறக்க அனுமதி இல்லை. ஆலய பொறுப்பாளர்கள் 12 பேர் மட்டுமே ஆலயங்களில் இருக்க அனுமதிக்கப்படும்.

### இரண்டாம் கட்ட மாநிலங்கள்:

தேசிய மீட்புத் திட்டத்தில் இரண்டாம் கட்ட மாநிலங்களில் உள்ள ஆலயங்களிலும் மேற்கண்ட விதிகள் அனுமதிக்கப்படும். இரண்டு தடுப்பூசி நிபந்தனை, பக்தர்கள் எண்ணிக்கை, ஆலயத் திறப்பு நேரம், ஆலய குருக்கள் பணியாளர்களுக்கான அனைத்தும் ஒரே வகையாக இருக்கும்.

### மூன்றாம் கட்ட மாநிலங்கள் :

தேசிய மீட்சித் திட்டத்தில் மூன்றாம் கட்ட மாநிலங்களிலும் ஆலயங்களிலும் இதே விதிமுறைகள் அனுசரிக்கப்படும்.

ஆலயத்தில் திருமண விழாவோ, திருவிழாவோ நடத்த அனுமதி இல்லை. ஆலயத்திற்கு வரும் பக்தர்கள் முகக் கவசம் அணிந்திருக்க வேண்டும். மைசெஜாத்ரா செயலியை பயன்படுத்த வேண்டும். வருகையாளர் பதிவேட்டில் பெயர்களை பதிய வேண்டும்.

1 மீட்டர் தூர இடைவெளியை பின்பற்ற வேண்டும். கைத் தூய்மி கொண்டு சுத்தம் செய்து கொண்டு சுகாதாரத்தை பேண வேண்டும் என்று ஒற்றுமைத்துறை அமைச்சு கூறியிருக்கிறது.